
உ



பட்டிக்குடியிருப்பை பிறப்பிடமாகவும்,
கீரிசுட்டான் நெடுங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர்.திரு.வேலு கந்தையா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## "31ம் நாள் நினைவுமலர்"

## 03.03.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



பட்டிக்குடியிருப்பை பிறப்பிடமாகவும்,
கீரிசுட்டான் நெடுங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திரு.வேலு கந்தையா

அவர்களின்
சிவபதப்பேறு குறித்த

## "31ம் நாள் நினைவுமலர்"

## 03.03.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பாலும் பண்பாலும்
அனைவரையும் கட்டிஇழுத்து
அரவணைத்து அன்புகாட்டி
வாழ்வாங்கு வாழ்ந்து
எங்கள் எல்லோருக்கும் இனிய
உறவாக இருந்து வரும்வேளை
காலன் கவர்ந்து சென்றுவிட்ட
எங்கள் அன்பு உறவின்
பாதக்கமலங்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்

இவ்வண்ணம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# 31ம் நாள் நினைவாக...

மலர்வு
10
.
06
.
1935



உதிர்வு
01
.
02
.
2015

பட்டிக்குடியிருப்பை பிறப்பிடமாகவும்,
கீரிசுட்டான் நெடுங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர்
# திரு.வேலு கந்தையா

### திதி வெண்பா

அருள் வழியும் திருமுகமும் அழகு தவழ்-புன்னகையும்
வரு விருந்தும் தேடும் வாழ் திரயோதசி திதியும்-உருக்கமுடன்
இறைவனடி போற்றும் இள நெஞ்சும்-கொண்டுயந்த
அறம் வளர்த்த வேலு கந்தையா சென்றார் இறையடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர்

# திரு. வேலு கந்தையா

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

எழில் மிகுந்த வன்னி மண்ணிலே சொர்க பூமியாக விளங்கும் நாற்திசைகளிலும் இயற்கை வளங்களை கொண்டிருக்கும் பட்டிக்குடியிருப்பு என்னும் ஊரில் நாகமணியின் புத்திரனான வேலு என்னும் தந்தையாருக்கும் பார்வதி அம்மாளுக்கும் ஆறாவது புதல்வனாக கந்தையா 10.06.1935ம் ஆண்டு அவதரித்தார்.

அக்காலத்தில் கல்வியறிவு குன்றி காணப்பட்ட போதும் இவர் எட்டாம் வகுப்பு வரை பள்ளிக்கூடத்தில் படித்தார் இவரது குடும்ப வறுமையால் பள்ளிப்படிப்பை மேலும் தொடர முடியாமல் போன போது சிறு சிறு வேலைகளை செய்து குடும்ப பொறுப்பில் ஓர் சிறிய பகுதி தேவைகளை பூர்த்தி செய்தார்.

இவர் தனது வாலிப பருவத்தை எய்தியதும் அக்காலத்தில் பெரிய பட்டிணமாக வியங்கிய யாழ் நகரிலுள்ள புங்குடிதீவு என்னும் ஊரில் அவதரித்த அன்னத்துக்கே அதிபதியான **அன்ன லக்ஷ்மி** யின் நாமத்தை கொண்ட ஓர் பெண்மணியை திருமணம் புரிந்து இல்லற வாழ்க்கைக்கு திரும்பினார்.

இவரின் இல்லம் மேலும் செழிப்புற முதலாம் காலாய் அமிர்த ராணியும்,தந்தைக்கு ஒரு மகன் வேண்டும் என்ற வாக்கிற்கிணங்க சிறிஸ்கந்தராசா இரண்டாவது காலாய் தவப் புதல்வனாயும் அதே போல் தாய்க்கு விவேகனாந்தா ராசா. மூன்றாங் கால் மகானாகவும். இறுதியாக அன்னை சாரதா தேவியின் நாமத்தைக் கொண்ட செல்லப் பிள்ளையும் பிறந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இவர் மனைவி பிள்ளைகள் என வாழ்ந்து கொண்டு இருக்கும் வேளையில் அவர்களின் சந்தோசத்தை பரிக்க அந்த இயமன் கந்தையாவின் மனைவியை காவு கொண்டான்.

இந்த துயர் கந்தையாவை மிகவும் கொடுரமாக வாட்டியது நான்கு பிள்ளைகளையும் எவ்வாறு வளர்க்க போகின்றேன் என்பதை நினைக்க அவர் துயர் மிகவும் அதிகமானது இதனால் குழந்தைகளின் கல்வி கூட மிகவும் பாதிக்கப்பட்டது. தாயின் பிரிவால் குழந்தைகள் பொரிதும் துயருற்றனர்.

சிறிது காலம் சென்றதும் கந்தையா தனது பிள்ளைகளோடு நினைத்ததை நடத்தி வைக்கும் மம்மில் பிள்ளையார் வீற்றிருக்கும் எழில் மிகுந்த அம்பகாமம் என்னும் ஊருக்கு அருகாமையில் உள்ள புலி மெச்சி நாதிகுளம் என்னும் ஊருக்கு தஞ்சம் புகுந்தார். அங்கு கூலி வேலை செய்தும் தோட்டம் துறவுகள் செய்தும் அயராது உழைத்து தனது பிள்ளைகளை மறுமணம் செய்யாமல் தானே வளர்த்து ஆளாக்கினார் அவரின் மூத்த பெண் பரும் எய்தியதும் பட்டிக்குடியிருப்பு கிராமத்தில் உள்ள வீரபுத்திரர் ஆலய மரபு வம்சத்தில் தோன்றிய குலசேகரம் கணபதிப்பிள்ளை என்பவரை மணம் முடித்துக் கொடுத்தார். பின்னர் தானும் தனது மூத்த மகனுமாக உழைத்து அதற்கு பிறகு பிறந்த பிள்ளைகளை கல்வி பயில வைத்தார்.

பின்னர் காதலில் விழுந்த இரண்டாவது மகனுக்கு **தங்க லக்ஷிமியை** திருமணம் செய்து கொடுத்தார். பின்னர் சாரதாவை சொந்த மச்சானாகிய சுப்பையாவின் மகானாக பரமசிவத்திற்கும் மணம் முடித்துகொடுத்தார். இறுதியாக தனது மூத்த மகனுக்கு தனது தங்கை தங்கமணியின் புதல்வியான உதயபாமாவை காதல் திருமணம் செய்து கொடுத்தார்.

இவ்வாறு பிள்ளைகளின் இன்பங்களிலும் பேரப்பிள்னைகளின் குதுகளத்தில் தனது வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்த கந்தையா நோயின் பிடியில் சிக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல வழிகளில் மருத்துவங்களை செய்தும் அவரின் நோய் முற்றாக குணமடையவில்லை எங்கோ ஒருஓரத்தில் அவரின் நோய் இருந்தது. இதற்கிடையில் இவரின் செல்லப்பிள்ளை சாரதாவும் அவளின் கணவனை நாகம் தனக்கு இரையாக்கி கொண்டது. இது இவரை பெரிதும் வாட்டியது. அவளோடும் அவளது பிள்ளைகளோடும் தனது வாழ்வின் அரைவாசிக்கட்டத்தை போக்கினார்.

சிறிது காலம் சென்றதும் இவரின் வீட்டுக்கே **மகாலக்ஷ்மியாக** அவதரித்த மூத்தமகளையும் கொடிய நோய் காவு கொண்டது. இதுவும் இவரை பெரிதும் வாட்டியது. தனது குலவிளக்கு அனைந்து விட்து போல் எண்ணினார்.

இவ்வாறான சம்பவங்களை வாழ்வில் எதிர் கொள்ளக் கொள்ள வருத்தத்தோடு வயதும் சென்றுகொண்டிருந்தது.

யுத்தம் சென்றுவிட்டது மீள்குடியேற்றம் வந்துவிட்டது என்று தன் மனதில் பெரிமிதம் கொண்ட கந்தையாவிற்கு மீள்குடியேற்றமோ மருமகனின் மரணத்தையே வரவேற்றது. இதனால் மேலும் துன்பத்தில் இருந்த கந்தையா கொடிய நோய்க்கு மீண்டும் ஆளாகினார். மகளின் அரவணைப்பில் தனது வாழ்க்கையை தொடர்ந்து கொண்டிருந்த போது வைத்தியசாலைகள் அவரை வரவேற்றனர். இவ்வாறு இருந்த போதும் அவர் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் என மூன்று தலமுறைகளையும் கண்டார்.

இவ்வாறு காலம் சென்று கொண்டிருந்த போது வயதும் முதுமையும் சென்று கொண்டிருந்தது நோயும் உச்சக்கட்டத்தில் சென்று அவரை நோய் படுக்கை போட்டது. 15 நாட்டகள் ஊண் உறக்கம் மில்லாது விரதமிருந்து தவமிருந்த து போல் தனது உறவுகளான மனைவி, மகள், மருமகன்மார் இடம் நாடி அவரது அம்மாவும் சென்றது. அன்னாரின் ஆத்மா சாந்திக்காக வேண்டுகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட
கண்டன் மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல்
அணிந்தென் உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலா கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவிழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரஎன் கண்கள்குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேலுன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போதுன்
அடியின் கீழிருக்க என்றார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசு முகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்த்த முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மனம்புணர வந்த முக மொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருள வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீதையின் பதினெட்டு அதிதியாயங்களை அடிப்படையாகக் கொண்ட உண்மைகளின் சாரம்சம்

வாழ்க்கை ஓர் அன்பு - அனுபவிப்போம்

வாழ்க்கை ஓர் அழகு - அதிசயிப்போம்

வாழ்க்கை ஓர் ஆன்மா - உணர்ந்திடுவோம்

வாழ்க்கை ஓர் இலக்கு - எட்டிடுவோம்

வாழ்க்கை ஓர் இரகசியம் - வெளிப்படுத்துவோம்

வாழ்க்கை ஓர் உறுதிமொழி - நிறைவேற்றுவோம்

வாழ்க்கை ஓர் விளையாட்டு - விளையாடுவோம்

வாழ்க்கை ஓர் வாய்ப்பு - பயன்படுத்துவோம்

வாழ்க்ககை ஓர் வெகுமதி - ஏற்போம்

வாழ்க்கை ஓர் சவால் - சந்திப்போம்

வாழ்க்கை ஓர் சாகசம் - துணிந்துநிற்போம்

வாழ்க்கை ஓர் துன்பம் - வென்றுநிற்போம்

வாழ்க்கை ஓர் கடமை - செய்துமுடிப்போம்

வாழ்க்கை ஓர் பாடல் - இசைப்போம்

வாழ்க்கை ஓர் பயணம் - நிறைவுசெய்வோம்

வாழ்க்கை ஓர் புதிர் - விடுவிப்போம்

வாழ்க்கை ஓர் போராட்டாம் - போராடுவோம்

வாழ்க்கை ஓர் பிரச்சிணை - தீர்வுகாண்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# கௌரி காப்பு

## *விநாயகர் துதி*

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற் கா.

காப்பெடுக்க வந்தேனே கௌரி அம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோல் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிருக்கு உயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகிஷாசுரனை கூறு போட்டவளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிவிடு
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலை புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விளைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நாம் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீர சக்தி தாருமம்மா
பாட்டுடைத் தேவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடன் பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாரேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வந்தவளே
விந்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எந்நாள் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதில் மாற்றிவிட்டாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகி வரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்குத் தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோருக்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோருக்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்கள் எல்லாம் நலமுடனே இணைந்து வரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்பினைக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழும்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைப்போல் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண் திறந்து காட்டுமடி
சொல்லற்கரிதான சோதிமிகு காப்பதனை
இருபத்தொரு நாள் வரையில் இசைவொடு விரதமிரு
பக்திமனதுடனே பரவி அணிவோர்க்கு
சித்தி எல்லாம் தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தில் உள்ளோர்கள்எல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவார்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வர முன் வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருள்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# சிவபுராணம்

## காப்பு

**தொல்லையிரும் பிறவிச் சூழுந்தளைநீக்கி**
**அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்**
**திருவாசக மென்னுந் தேன்.**

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈசனடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பணியான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
சொல்லா நின்றவித் தாவர சங்மத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியனே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
சிவனவனென் சிந்தையுள் நின்ற வதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கிச்

நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய விருளை
அறம்பாவமென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலங்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் கா(அ)ட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதாருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமா யல்லாயுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே

ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

*திருச்சிற்றம்பலம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

# கந்த சஷ்டி கவசம்

## காப்பு

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

துதிப்போர்க்கு வல்வினைபோம். துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்(து) ஓங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலன் அருள் கந்தர்
சஷ்டி கவசந்தனை.

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதுவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறனெ
வசுர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷ ணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேல் முந்து
எந்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்(று)
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனக்வேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிர்வேல் காக்க
அரையிருள் தன்னில் அனைய்வேல் காக்க
ஏமத்தில் ஜாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனக்வேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராக்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேறி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்(து) ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
தரையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள்எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டு உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரிவயப் போத்தொடு நாயும்
எலியும் கரடியும் இனித்தொடா தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவம்ஒழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் காக்க
பழனிப் பதிவாழ் பாலகுமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் என்தாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன ஆடினேன் பரவசமாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைகுரு வாழ்க
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப(து) உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையென்)று) அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென்(று) அடியார் தழைத்தி அருள்செய்
கந்தர் கஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சு மிகளில்
வீரலட்சு மிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்(கு) உவந்(து) அமுதளித்த
குருபரன் பழனிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது பாச மிகு பாட்டனார் இறைபாதம் அடைந்த செய்தி கேட்டு உடன் வந்து எங்கள் துக்கத்தில் கலந்து கொண்ட அயலவர்கள், உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நேரில் சமூகமளிக்க முடியாத நிலைமையில் உளம் கலங்கி தொலைபேசி மூலம் உள் நாட்டிலிருந்தும் , வெளி நாட்டிலிருந்தும் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் வார்த்தை கூறியவர்களுக்கும்
ஈமக்கிரியைகளை நாற்கற்றிய குருமாருக்கும். இன்றைய அந்தியேட்டி சபீண்டீகரணக் கிரியைகளில் பங்குகொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்
ஜெயமாறன் பேபிசாளினி
அக்சயா
(குடும்பத்தினர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா வழி

**வேலு + பார்வதி**

- *செல்லத்துரை
- *வினாசித்தம்பி
- *நாகமணி
- கிட்ணபிள்ளை
- சின்னம்மா
- *கந்தையா
- பொன்னம்மா
- தங்கமணி
- *சரஸ்வதி
- மகேஸ்வரன்

**குமாரவேல் + காமாட்சி**

- துரைராசா
- *அன்னலக்ஷ்மி
- அன்னம்மா

**கந்தையா + அன்னலக்ஷ்மி**

***அமிர்தராணி + *கணபதிப்பிள்ளை**

- அமுதா + இராசேந்திரன் → வினுஜன், கம்சா
- மணிமாறன் + அனுசியா
- ஜெயமாறன் + பேபிசாலினி → அக்சயா
- ஜீவன்
- சரிதா + சர்மிளராஜ்

**சிறிஸ்கந்தராசா + உதயபாமா**

- பேபிசாலினி + ஜெயமாறன் → அக்சயா
- பேபிசாமினி
- கஜீவன்
- கஜன்

**விவேகானந்தராசா + தங்கலக்ஷ்மி**

- ஜசோதா + கமலதாசன் → ஜதுர்சனா
- விஜிதா + சிவானந்தன் → ஜக்சனா
- ஜெனிதா + சந்திரசேகரன் → கிசோன்
- ரேகா + திலிபன் → நதிசனா
- வினோதினி

**சாரதா + *பரமசிவம்**

- பரத்
- பகிரதன்
- பவித்திரா + தினேஷ் → துசாரா
- துக்ஷ்யந்தன்
- துக்ஷ்யந்தினி

* அமரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள்,
அது வேறொருவருடையதாகும்.

**"அதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமாகும்"**

**பகவான்
ஸ்ரீ கிருஸ்ணர்**



NISA Covers

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org